
www.lkedu.lk

தமிழ்

க.பொ.த.உயர்தரம்

சிறுகதை - நெருக்கடி



பாத்திரப் பண்புகளும் பார்வைகளும் பதிவுகளும்

தொகுப்பாக்கம்

திரு.எ.த.ஜெயரஞ்சித்

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

(ஆசிரிர்,மட்.ககு - பால்சேனை தமிழ் மகா வித்தியாலயம், கல்குடா கல்வி வலயம்)

மிகமுக்கியம் : இங்கு தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் சிறுகதையின் விடைக்குறிப்புக்கள் மிகுந்த உடல் உள உழைப்பில் நானும் எனது 2019 தொகுதி மாணவர்களும் சேர்ந்து தயாரித்த குறிப்புக்களாகும். இவற்யின் பதிப்புரிமையை மீறாமல் நாகரிகமாக மாணவர்களுக்கு சென்றடையச் செய்யுங்கள்.

சமர்ப்பணம்

என் கற்றல் கற்பித்தல் பணியில் என்னை வளர்த்த வளர்ர்த்துக்கொண்டிருக்கும் என் மாணவர்களுக்கு இதை சமர்பிக்கின்றேன்.

நன்றி:தரம்13 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி,வளநூல்,தேசிய கல்வி நிறுவகம்.

www.lkedu.lk

www.lkedu.lk

கற்றற்பேறுகள்

- ≈ சிறுகதையினூடாக வெளிப்படுத்தப்படும் விடயங்களை விபரித்துக் கூறுவர்.
- ≈ சிறுகதையின் வெயிப்பாட்டு முறையினை விளக்கி எழுதுவர்.
- ≈ சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணப்பண்புகளை விளக்கி எழதுவர்.
- ≈ சிறுகதையில் கையாளப்பட்டுள்ள மொழிநடை பற்றிக் கருத்துரைப்பர்.
- ≈ சிறுகதையினை நயந்து எழுதுவர்.

பிச்சமூர்த்தியின் (1900 - 1976) படைப்புலக ஆளுமை:

கும்பகோணம் நடேசையர் - காமாட்சியம்மாள் தம்பதிளின் புத்திரரான பிச்சமூர்த்தியின் இயற்பெயர் வேங்கடமகாலிங்கம். அவர் சென்னை சட்டக்கல்லூரியிற் பயின்று 1938 வரை வழக்கறிஞராகவும் பின் 1935 - 1956 காலப்பகுதியில் இந்துமத அறநிலையப் பாதுகாப்புத்துறை அதிகாரியாகவும் கடமையாற்றினார். ஆரம்பத்தில் பத்திரிகைகளில் ஆங்கிலத்தில் எழுதியவர் 1925 இல் பாரதியின் எழுத்துக்களுடனான அறிமுகம் கிட்டியது முதல் தமிழில் எழுதத் தொடங்கினார். தமிழில் புதுக்கவிதைத் துறையில் முன்னோடியாகக் கருதப்படும் பிச்சமூர்த்தி சிறுகதைத்துறையிலும் தனதுஆற்றலை வெளிப்படுத்தியள்ளார். 1932இல் கலைமகளில் வெளிவந்த 'ஸயன்ஸுக்குப் பலி' என்ற சிறுகதையே அவரது முதலாவது சிறுகதை என்று கருதப்படுகிறது. 'மணிக்கொடி' சஞ்சிகையிலேயே அவரது கவிதைகளும் சிறுகதைகளும் பெரிதும் வெளிவந்துள்ளன. நாடகம், கட்டுரை முதலானவற்றையும் எழுதியுள்ளார். 'பதினெட்டாம் பெருக்கு' (1979) முதலாக அவரது சிறுகதைகளைக் கொண்ட பல தொகுதிகள் வெளிவந்துள்ளன.

அவர் வெளிப்படையானவர் என்பதாலும், சிக்கலற்றவர் என்பதாலும் அவருடைய ஆளுமையைப் புரிந்து கொள்வது சுலபம். மேலும் மிக ஆத்மார்த்தமான கலைஞரான இவருக்கும் இவரது படைப்புகளுக்கும் இடையே இடைவெளி இல்லை. தன்னிடம் இல்லாத ஒரு குணத்தை வெளிப்படுத்தி அதற்குரிய மதிப்பை பிறரிடமிருந்து பெற முயலும் கெட்டிக்காரத்தனம் இவரது படைப் புகளில் ஒரு வரியில் கூட இல்லை. சரியோ தவறோ, உயர்வோ தாழ்வோ, தன்னம்பிக்கை-களை, தன் பார்வை களை தன் ஆசாபாசங்களை முழுமையாகத் தன் படைப்புகள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டவர் அவர்.

பிச்சமூர்த்தி தென்னிந்தியாவில் கலைகளின் உன்னத வெளிப்பாடுகள் கொண்ட மண்ணில் பிறந்தவர். அவருடைய தகப்பனார் ஹரிகதை, நாடகம், ஆயுர்வேதம், சாகித்யம், தாந்திரீகம் ஆகிய துறைகளில் வல்லவராக இருந்தார் என்பது தெரிகிறது. கலை, கல்வி, சமயம், தொண்டு ஆகியவற்றின் பாதிப்பிலிருந்து கிடைக்கும் ஒரு உன்னத மனநிலைக்கும் கலாசாரத்திற்கும் பிச்சமூர்த்தி வாரிசாக வந்திருக்கிறார். வாழ்க்கையின் மேலான குறிக்கோளில் கவனம் கொண்ட குடும்பத்தின் வாரிசு. லோகாயுதப் போட்டியில் முண்டி அடிப்பதில் இருந்து முற்றாக விலகி, அறிவு, கலை, பண்பாடு ஆகியவற்றின் மேன்மைகளைத் தேர்வு செய்த குடும்பத்தின் வாரிசு.

பிச்சமூர்த்தியின் படைப்புலகம் பொதுவாகப் பண்பட்டவர்களின் செல்வாக்கு மிகுந்தது. தார்மீக நெறிகளில் அக்கறை ஒழுக்கங்களைப் பேணுவதில் கவலை தன்னைச் சுற்றி வாழ்ந்திருப்பவர்கள் மீதும், ஜீவராசிகள் மீதும், இயற்கை மீதும் நேசம் மரபு வகுத்திருக்கும் நெறிகளைப் பேண முடியாமல் போகும் போது ஆழ்ந்த மன நெருக்கடி பிறருடைய துன்பங்கண்டு நெகிழும் மன இயல்பு ஆகிய குணங்கள் கொண்ட கதை மாந்தர்கள்தான் படைப்பாளியின் பார்வைக்கு உவப்பானவர்கள். பொதுவாக இவர்களுடைய உன்னதங்களை நிலை நாட்டவே எதிர்மறை கொண்ட வேறு கதாபாத்திரங்கள் இவர்களைச் சுற்றிச் சூழ்ந்து வருகிறார்கள்.

படைப்பில் பிச்சமூர்த்தியின் பக்கம் மிகத் தெளிவானது. அதில் ஒளிவு, மறைவு எதுவும் இல்லை. தர்மத்தையோ, ஒழுக்க நெறிகளையோ அழுத்துவது அல்லது அழுத்தும்போது உளவியலை மறந்து போவது கலை வெற்றிக்கு இட்டுச் செல்லாமல் இருக்கலாம். ஆனால், தர்மத்தையும் ஒழுக்கத்தையும் அழுத்துவதுதான் படைப்பாளியின் கடன் என்று அவர் நினைக்கிறார்.

இயற்கைதான் அவருடைய வேதம். அதைவிடவும் மேலாக நிற்கும் புத்தகம் எதுவும் அவருக்கு இல்லை. நெருக்கடிகளின் போது கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்தது அவருக்கு நினைவுக்கு வராமல் போகலாம். ஆனால், எறும்புப் புற்று ஒன்றை கூர்ந்து பார்த்ததின் மூலம் அவர் கற்றுக்கொண்ட பேருண்மை அவருக்கு ஒருபோதும் நினைவுக்கு வராமல் போகாது. இந்த நெருக்கடியைக் கலையாக அவர் அலசும்போது கிருஷ்ண பரமாத்மாவை விட எறும்புகள் அவருக்கு முக்கியமானவை. இது

www.lkedu.lk

www.lkedu.lk

அவருடைய வாழ்க்கைப் பார்வையின் மிக முக்கியமான அம்சமாகும். அவருடைய படைப்புலகத்தில் மனிதர்களைப் போல செடிகொடிகளும் முக்கியமானவை. காற்றும், ஒளியும், எறும்பும், புழுக்களும் முக்கியமானவை. ஜடங்கள் முக்கியமானவை.

பிச்சமூர்த்தியின் மரபு சார்ந்த குறியீடுகளை மதத்தின் மீது அவர் கொண்டிருக்கும் நம்பிக்கையின் வெளிப்பாடாக நாம் தவறாக எடுத்துக்கொண்டுவிடக்கூடும். அதே மாதிரி படைப்பில் யாப்பை மீறி வந்தமையை மரபைத் தாண்டியப் பாய்ச்சலாகவும் நாம் தவறாக எடுத்துக்கொண்டுவிடக்கூடும். படைப்பாளியின் இளம் பருவமே அவன் படைப்பின் அநேக குணங்களைத் தீர்மானிக்கிறது என்ற உளவியல் சார்ந்த முடிவு ஆழ்ந்த உண்மைகளைக் கொண்டது. இளம் பருவத்தில் மனம் சேர்த்துக்கொண்ட குறியீடுகளின் மீதே படைப்பாளிக்கு நெருக்கமான உறவு இருக்கிறது. நம் வாழ்க்கையோ மதத்தின் முழுப் பிணைப்புக் கொண்டது. ஆக தன் வாழ்க்கைப் பின்னணியில் தன் மரபு தந்த குறியீடுகளை பிச்சமூர்த்தி சுதந்திரமாகப் பயன்படுத்துகிறார். இந்தக் குறியீடுகளுடன் இணைத்து இயற்கையின் மீது அவருக்கு இருக்கும் ஆழ்ந்த ஈடுபாடுகள் மூலம் சேர்த்துக்கொண்ட குறியீடுகளையும் இடைகலந்து தந்துகொண்டு போகிறார்.

வாழ்க்கையை மனித குலத்தின் விரிந்த தளத்தில் வைத்து யோசிப்பவர் பிச்சமூர்த்தி. நாம் வாழ்க்கையோடு ஒட்டிக்கொண்டிருக்கும் புள்ளியில் விஞ்ஞானத்தின் சாதகமான அம்சங்கள் எண்ணற்ற வகைகளில் விரிந்து வாழ்க்கையின் கடினத்தைச் சுலபமாக்கியுள்ளது. ஆனால், தன்னை இதப்படுத்தியுள்ள விஞ்ஞானத்தைப் பற்றி பிச்சமூர்த்தி நினைவு கொள்வதில்லை. மனிதகுலத்தை அச்சுறுத்தும் விஞ்ஞானத்தின் எதிர்மறையை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ மனிதன் சங்கடப்படுவதைப் பொறுத்துக்கொள்ள முடியாத இயல்பு கொண்ட அவர், மனித குலத்தையே அழிக்க நினைக்கும் தீய சக்திகள் மீது கடுமைக் கொண்டது இயற்கைதான். ஆனால், விஞ்ஞானத்தின் இந்த எதிர்மறைக் குணங்களைதான் பெற்றிருக்கும் வாழ்க்கை அனுபவங்கள் சார்ந்து விவரிக்கும் வாய்ப்பு அவருக்கு இல்லை.

கலைஞன் யார் என்பதற்கு பிச்சமூர்த்தியின் பதில் முக்கியமானது. ‘‘மேலும் கலைஞன் என்றொரு தனி சிருஷ்டி இல்லை. அவனும் மனிதன்தான். மனிதன்தான் இவ்வித சிருஷ்டிகளைச் செய்தான். வேறெந்தப் பிராணியும் செய்யாத இச்செயலை மனிதன் மனிதனுக்காகத்தான் செய்கிறான். ஏனெனில் வேறெந்தப் பிராணிக்கும் அனுபவிக்கத் தெரியாது. மனிதனுக்குள்ளே கலைஞனும், கலைஞனுக்குள்ளே மனிதனும் இருப்பதால்தான் கலைப் படைப்புகளை உருவாக்கமுடிகிறது’’ என்கிறார் பிச்சமூர்த்தி. (‘எதற்காக எழுதுகிறேன்?’ ‘எழுத்து’மே,1962)

‘நெருக்கடி’ சிறுகதை முதன்மைக்குறிப்புக்கள்

- ‘‘ந.பிச்சமூர்த்தியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள் (சிறுகதைகள்) என்னும் 2000 ஆம் ஆண்டு வெளிவந்த தொகுதியில் ‘‘நெருக்கடி’’ சிறுகதையும் இடம்பெற்றுள்ளது.அதற்கு முன்னர் இச்சிறுகதை ஏடொன்றில் வெளிவந்திருக்க கூடும்.பின்னர் ‘‘மாங்காய் தலை’’ சிறுகதைத் தொகுப்பிலும் இடம்பிடித்திருந்தது.
- பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் தத்தளிப்பதைத் சாதாரண வழக்கில் நெடிருக்கடி என அழைப்பர். இச்சிறுகதையில் சரவணமுத்து என்ற காபாத்திரம் நெருக்கடியினுள் சிக்கித் திணறுவதையும், அந்த நெருக்கடியிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கு அயல்வீட்டுப் பங்காளாக்கரரர் குறுக்கு வழியொன்றைக் காட்டி உதவுவதையும், முடிவில் சரவணமுத்துவின் மீது புகார் சமர்ப்பித்த இனஸ்பெக்டரே மனிதாபிமானத்துடன் நடந்து கொள்வதனூடாகச் சரவணமுத்துவின் நெருக்கடி தீர்ந்து விடுவதாகவும் கதையோட்டம் அமைந்துள்ளது.
- சிறுகதையின் முக்கியமான நோக்கமாக அல்லது கருப்பொருளாக மனிதனானவன், தன்னால் முடிந்தவரை மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவவேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.
- சரவணமுத்து கதையின் பிரதான கதாபாத்திரம். அவரது மகள் சின்னப்பெண், அவளிலும் மூத்த மகன், இன்ஸ்பெக்டர், பக்கத்து பங்காளக்காரர்,சென்னை மாகாண அதிகாரி, அலுவலக குமாஸ்தா, அதிகாரியின் அந்தரங்க குமாஸதா, ஆகிய கதாபாத்திரங்கள் கதையோட்டத்திற்கு உதவியுள்ளன.
- சரவணமுத்து, இன்ஸ்பெக்டர், பங்களாக்காரர், சென்னை மாகாண அதிகாரி ஆகிய நான்கு கதாபாத்திரங்களைச் சுற்றியே கதை படர்ந்துள்ளது. இனஸ்பெக்டர் விவசாய இலாகாவைச் (திணைக்களம்) சேர்ந்தவர்.

www.lkedu.lk

www.lkedu.lk

நெருக்கடி கதைச் சாராம்சம்

சரவணமுத்து சவுக்கை நடுவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு சவுக்கை நடுவதற்கான பணமும், கூலிப்பணமும் அரசாங்கம் வழங்குகின்றது.சவுக்கு வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட அரச பணத்தினை தன்னுடைய குடும்பத்தின் வறுமை காரணமாக அதனை செலவு செய்கின்றார், இதனை அறிந்து விசாரணை நடந்து கால அவகாசம் கொடுத்து அதற்கு விவசாய கம்பனியில் வேலை செய்யும் அயல் வீட்டுக்காரர். உதவியினைப் பெற்று சவுக்கினை வளரச் செய்வதற்காக இக்கதை அமைந்துள்ளது.

சரவணமுத்துவினைத் தேடி இன்ஸ்பெக்டர் வருகின்றார், படி முதல் வீசம் வரை வரிசையில் எழுந்திருந்து சூழ்ந்தனர், அவர்களின் நிலை பெற்றோர்களின் பொருளாதாரத்தினை உணர்ந்தனர். சரவணமுத்து இருக்கிறாரா? என்றதும் ஒவ்வொரு குழந்தைகளும் எதிர்மாறான பதில்களைச் சொன்னார்கள். அதற்குள் மன்னிப்பு கேட்டு உள்ளே அழைத்துச் சென்று, கிழிந்த பாயைப் போட்டார், நோய்வாய்ப்பட்ட குழந்தை துணியில் படுத்துக்கொண்டிருந்தது.வீட்டு நிலமை தெரிவிக்க இயலாத தாழ்ந்த நிலையில் இருந்தது.சவுக்கு பயிரிட்ட இடத்தினை எப்பொழுது பார்ப்போம் என்று கேட்க, அங்கு போகத்தேவையில்லை , ஏன் பயிரிடவில்லையா? இல்லை. சர்க்கார் பணம் எங்கே? பிழைப்பிலே மண் விழுந்திட்டது.

ஒரு வருசமாக ஒருவர் மாறி ஒருவருக்குசீக்கு நோய், சம்பளத்தை தவிர சம்பாதிக்கத் தெரியாது, பணம் செலவழிந்து போய்விட்டது.காரியத்தை செய்து விடலாம் என்று பார்த்தால் முடியவில்லை.ஒரு வாரத்தில் பண்படுத்தி சவுக்கை வாங்கி முளைக்கச் செய்திட வேண்டும்.பக்கத்திலே பார்த்தீரே பயிரை.

இருவாரம் பார்க்கிறேன் அதற்குள் செய்திருந்தால் வா, இல்லாவிட்டால் பதினாறாவது நாள், நான் அறிக்கையை அனுப்பி விடுவேன், எனக் இன்ஸ்பெக்டர் கிளம்பிவிட்டார்.

சரவணமுத்துவின் வீட்டிற்கு அருகில், விவசாய கம்பனியில் வேலை செய்பவர், தன் வீட்டை விட தோட்டத்தை அழகாக பராமரித்தார்.

வருசம் 365 நாட்களும் காய்,கறி கிடைக்கும்.சரவணமுத்து வேலை முடிந்ததும் சரவணமத்து இங்கேதான் வருவார். இருவரும் பலதும் பத்தையும் கதைப்பார்கள், ஒரு நாள் வேதனையோடு மூலையில் உட்கார்ந்தார், என்ன பிரச்சினை என்று கேட்க தன்னுடைய பிரச்சினையை சொன்னார். இதற்குள் தன்னை ஆசுவாசப்படுத்த தேன்கூட்டினையும், சீந்தச் செடியினையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

என்ன அசட்டுத்தன்மையா? கஸ்டம் என்று முன்பே சொல்லியிருக்கலாகாதா? ஒரு நாள் என்றால் சொல்லலாம், ஓயாத கஸ்டத்தை பிறரிடம் எப்படிச் சொல்வது. நான் சொல்கிற படி அப்பீலை எழுதி அனுப்பு, எப்படி பயிரே இல்லாத போது இருப்பதாக எழுதச் சொல்லுகிறீரே,'ஆமாம் பயிரை உருவாக்கி விடுவோம்'நான் செல்வழித்துச் செய்து விடுகிறேன். ஒரு வருடம் பயிருக்கு எப்படி ஒரு மாதப் பயிரைக் காட்ட முடியும், பழைய யுகத்திலையே இரு,என்னுடைய கத்தரித்தோட்டத்தினைப் பாரும் மின்சார ஜலம் பாய்ச்சி விஞ்ஞான முறையில் செய்யப்பட்டுள்ளது.

சரவணமுத்துவின் அறிக்கையைப் படித்த சென்னை அதிகாரிக்கு ரௌத்திரம் பொங்கிற்று குமாஸ்தாவைக் கடிந்து கொண்டார். பேசாமல் இன்ஸ்பெக்டர் அறிக்கையை எடுத்துப்போட்டார்.அதைப்படித்து விட்டு எது? உண்மை, யார் பொய்யன்? அவருக்கு விளங்கவில்லை, உடனே தனது அந்தரங்க குமாஸ்தாவை பார்வையிட்டு அறிக்கை தரும்படி பணித்தார்.

ஒரு வருசத்திற்கு சவுக்கை பயிர் ஸ்தலத்தில் இருப்பதாக அறிக்கை வந்தது, இன்ஸ்பெக்டர் மீது அவநம்பிக்கை வந்தது.அவர் நேர்மைக்கு பெயர் பெற்றவர் என குறிப்பிடப்பட்டிருந்தது.சரவணமுத்துவின் வேலை நிறுத்துவதை வேலையை ரத்துச் செய்து பிழையான அறிக்கையிட்டு அனுப்பிய இன்ஸ்பெக்டருக்கு நோட்டீஸ் அனுப்பும் படி தீர்ப்பு வழங்கினார்.

நோட்டீஸ் பார்த்து இன்ஸ்பெக்டர் திடிக்கிட்டார், மறுபடியும் ஸ்தலத்திற்கு சென்று அங்கு சவுக்கை செழிமையாக இருப்பதை க்கண்டு திகைத்தார்.

சரவணமுத்துவிடம் சென்று, "இது என்ன செப்பிடுவித்தை" எனக்கேட்டு அதற்கு சரவணமுத்து, பக்கத்து பங்காளாக்காரர் நான் பிழைக்கச் செய்த வழி என்று முழு விபரத்தையும் கூறினார். வியப்பு விசைக்குச் சென்றது, பதில் அவசியம்தானா? குழந்தை குட்டிகள் இல்லை, ஓய்வெடுக்கும் காலம் நெருங்கி விட்டது.ஏதோ மாறாட்டம் என்றால், ஓய்வெடுக்க அதிகாரி கட்டாயப்படுத்துவார்.

"சரவணமுத்து! பங்களாக்காரர் விளக்கேற்றி வைத்தார் என்று சொன்னீரல்லவா? நான் விளக்கிற்கு எண்ணையாக இருந்து விட்டுப் போகிறேன்." என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்குக் கிளம்பினார்.

www.lkedu.lk

www.lkedu.lk

நெருக்கடி சிறுகதையின் செல்நெறி

- அரசாங்கத்திற்குரிய தோட்ட நிலத்தில் சவுக்கைப் பயிரிட்டுப் பாதுகாக்கும் தொழில் சரவணமுத்துவுக்குரியது. அதற்கான ஊதியமும் அவருக்கு அரசால் வழங்கப்படுகிறது.
- சவுக்கைப் பயிரிடுவதற்காக அரசு கொடுத்த பணத்தினைத் தன் குடும்ப வறுமை காரணமாகச் சரவணமுத்து செலவழித்து விடுகிறார். அரச நிலம் பயிர் செய்யப்படாமல் கட்டாந்தரையாகக் கிடக்கிறது.
- யாரோ எழுதிய புகாரின் பிரகாரம் (பயிர்செய்யப்படவில்லை என்று) விவசாய இனஸ்பெக்டர் சென்று தோட்ட நிலத்தைப் பார்வையிட்டு, அங்கே சவுக்கைப் பயிர் செய்யாதிருப்பதைக் கண்டு, சரவணமுத்துவின் வீடு சென்று அவரிடம் வினாவுகிறார். தனது குடும்பத்தின் வறுமை நிலையால் இப்படியான தவறு நடந்து விட்டதென்றும், எங்கேயாவது பணத்தைப் புரட்டிக் காரியத்தை நிறைவேற்றலாம் எனக்கருதிப் பயிர்ச்செய்கைக்கான பணத்தை எடுத்துச் செலவழிந்து விட்டேன் என்றும் சரவணமுத்து பதிலளித்தார்.
- உமக்குரிய நிலத்தை நான் போய்ப்பார்த்து ஒருவாரமாகி விட்டது. பக்கத்து தோட்டத்தில் சவுக்கைப் பயிரிடப்பட்டுள்ளது. மேலும் இரு வாரங்கள் தவணை தருகிறேன் அதற்குள் முடியாவிட்டால் 16வது நாள் எனது அறிக்கையை அனுப்பி விடுவேன் என இன்ஸ்பெக்டர் கூறிச் சென்று விடுகிறார்.
- குடும்பக்கஷ்டத்தால் விட்ட தவறின் விளைவாகச் சரவணமுத்துவுக்கு வேலை பறிபோய்விட்டது.சர்க்கார் (அரச) பணத்தினைக் களவாடிய குற்றஞ் சுமத்தப்பட்டது.
- விவசாயக் கம்பனி ஒன்றில் வேலைபார்க்கும், பக்கத்து பங்களா வீட்டுக்காரணின் அழகான தோட்டத்தின் மூலையில் வேதனையுடன் உட்காந்திருந்த சரவணமுத்துவைப் பங்களாக்காரர் கண்டு கவலைக்கான காரணத்தைக் கேட்டார். சரவணமுத்துவும் இதுவரை நடந்ததைக் கூறினார்.
- உண்மையை உணர்ந்து கொண்ட பங்களாக்காரர், சரவணமுத்து மறுத்த போதிலும் அப்பீல் எழுதிப் போடுமாறு தூண்டினார். ஒரு வருசம் வளர்ந்திருக்க வேண்டிய பயிரைச் சமகால விஞ்ஞான முறையின்படி ஒரு மாதத்தில் விளைவிக்க முடியுமென்றும், செயற்கையின் உதவியைக் கொண்டு இயற்கையைக் கூட ஊன்றிக்கொள்ள முடியுமென்றும் கூறியது போல் அவரது கருத்து காணப்பட்டது.மேலும் அப்பீலை அவரே தயார்செய்து, சரவணமுத்துவிடம் கொடுத்து அனுப்புமாறு சொல்லிவிட்டார்.
- அப்பீலைப் படித்த சென்னை மாகாண அதிகாரி, குழப்பத்துடன் இதுவரை நேர்மைக்குப் பெயர்போன இன்ஸ்பெக்டரின் அறிக்கையையும், அப்பீலையும் ஒப்புநோக்கிவிட்டுத் தமது அந்தரங்க குமாஸ்தாவை அனுப்பி உண்மையை அறிந்துவரச் செய்தார்.
- குமாஸ்தா சென்று பார்த்த போது கட்டாந்தரயாக இருந்த இடத்தில் சவுக்கை செழிப்பாக வளர்ந்திருந்தது. அவர் பார்த்து விட்டு உண்மையை அதிகாரிக்குக் கூறினார்.
- இன்ஸ்பெக்டருக்குத் தவறான புகார் அறிக்கை அளித்ததன் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஏன் உட்படுத்தக்கூடாது என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. திகைப்படைந்த இன்ஸ்பெக்டர் சரவணமுத்துவின் வீடு சென்றார். நடந்த முழு விபரத்தையும் சரவணமுத்துக் கூறியதுடன், தனது இக்கட்டை நீக்கப் பங்களாக்காரர் செய்த பேருதவி இதுவென்றார்.
- ஓய்வின் எல்லையை நெருங்கிவிட்ட இன்ஸ்பெக்டர், தான் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை என நினைத்து "பங்களாக்காரர் விளக்கேற்றி வைத்தாரென்று சொன்னீரல்லவா, நான் விளக்குக்கு எண்ணெயாய் இருந்து விட்டுப் போகிறேன்"என்று சொல்லிவிட்டுத் தன் வீடு திரும்பினார். அவரது மனிதாபிமானம் அவர் சுயநலத்தையும் தாண்டி வெற்றி பெற்றுவிட்டது.

சிறுகதையில் ஆசிரியர் கூறும் விடயம்

- நெருக்கடிக்கு உள்ளாகிய ஒருவரது நிலையும் அதிலிருந்து அவரை வெளிக்கொண்டு வருவதற்காக அனுதாபத்துடன் செயற்படும் பாத்திரங்களின் துலங்கலும்.
- சிறுகதையின் முக்கிய நோக்கமாக அல்லது கருப்பொருளாக மனிதனானவன், தன்னால் முடிந்தவரை மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவவேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் தான் கூறும் விடயத்தினை எடுத்துக்காட்டுகின்ற விதம்:

- கதாபாத்திரங்களின் உரையாடல்களினூடாக கதை நகர்த்திச் செல்லப்படுகிறது.
- இயற்கைக் காட்சிகளோடு தொடர்புபடுத்தி நிலைமைகள் சித்தரிக்கப்படுகின்றன.உ-ம்: அவரைக் கொடியொன்று கொழுகொம்பின் துணையுடன் மேலே படர்ந்துகொண்டிருப்பது தெரிந்தது.
- அதிக பிள்ளைப் பெற்று அவர்களுக்கு நோய் பாதிப்பும் அதனை நிவர்த்தி செய்வதற்கு போதிய பணம் இல்லாது வறுமைப்படும் சரவணமுத்துவை பிரதான பாத்திரமாகக் கொண்டு, சவுக்கை

www.lkedu.lk

www.lkedu.lk

பயிரிடுவதற்கு அரசினால் கொடுக்கப்பட்ட பணத்தினை தன் வறுமையினைப் போக்குவதற்கு செலவழித்து விட்டார். இதனால் கவலையுற்ற சரவணமுத்துவிற்கு உதவிசெய்வதாக விஞ்ஞான தொழிநுட்பத்தினை பயன்படுத்தி சவுக்கை செழித்து வளரச் செய்வதன் மூலம் எடுத்துக்கூறுகிறார்.

நெருக்கடி சிறு கதையில் ஆசிரியர் கையாண்ட உத்திமுறைகள்:

- ஒருவரை விசாரித்து நலம் விசாரிக்கும் நோக்கத்தோடு கதை ஆரம்பிக்கும் நுட்பத்தினையுடையவன்.
- உரையாடல் பாங்காக கதையினை நகர்த்திச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது.
- நம்பிக்கையினை ஊட்டும் வகையில் தத்துவங்களைக் கூறிக் கதையினை நகர்த்திச் செல்கின்றார்.
- பிரதான காதாப்பாத்திரம் தவறு செய்திருப்பினும் வாசகர் மனங்களில் அக்கதாபாத்திரத்தின் மீது அனுதாபத்துடன் நோக்கும் விதத்தில் சிறுகதைத் தொடக்கத்திலேயே சரவணமுத்துவின் ஏழ்மையான குடும்ப நிலைமையை அறிமுகஞ் செய்திருத்தல்.
- மனிதாபிமான நிலையினை ஊட்டும் வகையில் கதையினை நகர்த்திச் செல்கின்றார்.
- வர்ணனைப் பாங்கான கதையினைக் கொண்டு கதையினை நகர்த்திச் செல்கின்றார்.
- மனிதாபிமானமே சொந்த நலனிலும் மனிதனுக்கு மேலானது என்ற மையப்பொருளைச் சிறுகதைக்காக எடுத்துக் கொண்டமை.
- நல்ல சிறுகதைப் பண்புகளுக்கு அமைவாகக் குறைவான காதாப்பாத்தரங்கள், நிகழ் களம் எதுவென அடையாளம் காண முடியாத கிராமச் சூழல், ஆவலைத் தூண்டும் விதமான எடுத்துரைப்பும் சம்பவக் கோர்வைகளும், வியக்கத்தக்கதான முடிவு என்றவாறு சிறுகதை அமைந்திருத்தல்.
- சிறுகதைகயில் உள்ள பாத்திரங்களை மனிதாபிமானம் நேர்மை உள்ளவர்களாகப் படைக்கப்பட்டுள்ளது: சிறு கதையின் தொடக்கத்திலும் முடிவிலும் வரும் இன்ஸ்பெக்டர் கதாபாத்திரத்தை நேர்மையும் மனிதாபிமானமும் மிக்க உயர்வான மனிதராக சித்திரித்தமை. சிறு கதையின் எல்லாக் கதாபாத்திரங்களும் ஏதோ ஒரு வகையில் மனிதாபிமானத்துடன் நடப்பதை உறுதிப்படுத்துவதான கதையாக அமைத்திருத்தல்.
- சரவணமுத்துக் கதாபாத்திரத்தின் நேர்மையைப் பல இடங்களில் எடுத்துக்காட்டியதன் மூலம் அக்கதாபாத்திரம் நேர்மைக்கும் இயலாமைக்கும் இடையில் தத்தளிப்பதை உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்ளச் செய்தமை.
- பங்களாக்காரர் நவீன அறிவியல் முறைகளில் விவசாயம் செய்வதில் கைதேர்ந்தவர் என்பதை அவரின் தோட்டத்து காய், கறி விளைச்சல் ஊடாகவும் அவர் விவசாய நிலையத்தில தொழில் புரிபவர் என்பதாகவும் எடுத்துக்காட்டியதுடன் மற்றவருக்கு உதவும் மனிதாபிமானத்தையும் சரவணமுத்துவுக்காக குறுகிய காலத்தில் பயிர் விளைவித்துக் கொடுத்ததையும் பொருத்தமான முறையில் சித்திரித்தல்.

நெருக்கடி சிறு கதையில் உலாவும் கதாபாத்திரங்களின் பண்புகள்

(அ) சரவணமுத்து

- மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தோடு வாழ்ந்து அக்குடும்பத்திற்கு ஏற்படும் துன்பத்திற்காக பெரும் துண்பப்படுவார்.“இதோ கூடத்திற்கு ஒழிவில்லாமல் ஒரு வருசமாக ஒருவர் மாறி ஒருவராக சீக்கு(நோய்). தன் சம்பளத்தைத் தவிர சில்லறை சம்பாதிக்கத் தெரியாதவர். செலவுக்குக் கஷ்டப்படுபவர். மிகவும் வறுமையான குடும்ப நிலையில் அதிக பிள்ளைகளுடன் வாழ்பவர்.
- அரசினால் மேற்கொள்ளப்படும் சவுக்கை பயிரிடும் பணியில் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்கிறான்.
- தான் செய்வது தவறு என்று தெரிந்தும் தன் குடும்பத்தின் நோய்க்காக் சர்க்கார் சவுக்கை பயிரிடத் தந்த சர்கார் பணத்தைச் செலவு செய்துவிட்டுச் செய்வதறியாது தவித்தவர்.
- ஒரு தொழிலைத் தவிர வேறு எந்த சில்லறைத் தொழில்களில் ஈடுபடுவதில் நாட்டம் குறைந்தவனாக காணப்படுகின்றான். “எனக்கு சம்பளத்தைத்தவிர வேறு சில்லறை சம்பாதிக்கத் தெரியாது”
- “குறிப்பிட்ட காரியத்திற்காக கொடுக்கப்பட்ட பணத்தை அதற்காக செலவழிக்காமல் சர்க்காரை மோசம் செய்து விட்டார்.என்று சரவணமுத்துவின் மீது குற்றம் சாட்டப்பட்டு விட்டது”
- விஞ்ஞான தொழிநுட்பம் சார்ந்த அறிவற்றவனாக காணப்படுகின்றான்:“இது சாதாரண முறையில் பயிர் செய்யப்பட்ட கத்தரிப்பாத்தி. இது மின்சார ஜலம் பாய்ச்சி விஞ்ஞான முறையில் பயிர் செய்யப்பட்ட பாத்தி.”“விஞ்ஞான ரீதியில் பயிர் செய்வதால் ஒரு மாதப் பயிர் ஒரு வருசத்திற்கு பயிர் போல் தோற்றமளிக்கும் என்றா சொல்லுகிறீர்கள்?”

www.lkedu.lk

www.lkedu.lk

- ஒருவர் செய்த உதவியினை பெரிதாக எண்ணி நடக்கும் இயல்பினைக் கொண்டவன்:“ பக்கத்து பங்களாக்காரர் நான் பிழைக்க செய்த வழி”“சரவணமுத்து! பங்களாக்காரர் விளக்கேற்றி வைத்தார் என்று சொன்னீரல்லவா?”
- இன்ஸ்பெக்டர் வீடு தேடி வந்து சவுக்கை பயிரிடாததற்கு காரணம் கேட்ட போது மிகவும் நடுக்கத்துடன்,“சார்! ஒன்று சொல்லுகிறேன் நீங்கள் கடவுள் மாதிரி. பேரிய மனது செய்தாலொழிய நான் கெட்டு விடுவேன்” என்று உண்மையைக் கூறிக் கெஞ்சி நின்றவர்.
- பக்கத்து தோட்டத்தில் சவுக்கைப் பயிரிட்டு இருப்பதைத் வைத்துக்கொண்டு இந்தப் புகார் பொய்யென்று எழுதி அனுப்பச் சொல்கிறீரா? என்று இன்ஸ்பெக்டர் கேட்டபோது, மனச்சாட்சியுடன் “அப்படிச் சொல்வேனா சார்?” என்று பேசியவர். பக்கத்து பங்களாக்காரர் அப்பீல் அனுப்பும்படி கூறிய பொது இன்ஸ்பெக்டர் பயிரில்லாததைப் பார்த்துச் சென்ற பிறகு மறுக்க முடியுமாங்க? இல்லாததை இருப்பது போல் எழுத முடியமா? எனக்கூறி மறுத்தவர். பின்னர் பங்காளக்காரரின் ஆலோசனைப்படி அப்பீலை அனுப்பியவர்.
- குருவிகளைப் பார்த்து இவைபோல் இருந்தால் கவலை யில்லையே என வருந்தியவர்.
- சீந்தில் கொடியானது வளரும் பயிரைச் சுற்றிக் கிடப்பதைப் பார்த்து “உலகத்தில் பிழைக்க முயலும் போது சீந்தில் கொடியைப் போல் தரித்திரமும் கூட வந்து கழுத்தை நெறிக்காமல் இருப்பது போல் இருக்கிறது.” எனத் தன் வாழ்க்கையுடன் பொருந்தி நோக்கி வேதனைப்பட்டவர்.
- அப்பீலின் விளைவாகக் குற்றவாளியாகக் கருதப்பட் இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு வந்து “இதென்ன செப்பிடு வித்தை! கட்டாந்தரையில் இரண்டுமாதத்திற்குள் பயிரேற்றி விட்டீரே! அதோடு எனக்கும் ஆபத்தைக் கொண்டுவந்து விட்டீரே!” எனக் கேட்ட போது “பக்கத்து பங்களாக்காரர் தான் பிழைக்கச் செய்த வழி” என விபரத்தை ஒழிக்காது நேர்மையுடன் கூறியவர்.
- இயலாமை காரணமாகத் தவறு செய்தாலும், அதற்காக உண்மையாகவே வருந்தியவர்.

(ஆ)இன்ஸ்பெக்டர்

- விசாய இலாகா இன்ஸ்பெக்டர் பணியில்,சரவணமுத்துவின் தோட்டத்தில் சவுக்கைப் பயிரிடாமையை நேரில் பார்த்தபின், அவரது வீடு சென்று காரணங் கேட்டவர்.
- நேர்மையானவர் அதாவது சரவணமுத்து பயிரிடவில்லை என்பதனை ஓரிரு வாரம் கழித்து அரசிற்கு அறிக்கை எழுதி அனுப்புகின்றார்.“ஒரு வாரம் இல்லை இரண்டு வாரம் பார்க்கிறேன்.அதற்குள் ஏதாவது செய்திருந்தால் என்னிடம் வந்து சொல்லுங்கள். நீர் வராவிட்டால் பதினாறாவது நாள் என் அறிக்கையை அனுப்பி விடுகிறேன்”
- இரக்க சுபாவம் உடையவன், சரவணமுத்துவின் வீட்டிற்குச் சென்று அவரின் ஏழ்மை நிலையைக் கண்ணாரக் கண்ட நிலையில பிள்ளையின் உடைகளைப் பார்த்தும், நோய்வாய்ப்பட்ட அவரின் பிள்ளைகளைக் கண்டும், குடும்பத்தின் வறுமைக்காக அரச பணத்தினை செலவு செய்தமையினைப் பொறுத்து இரண்டு வாரம் அவகாசம் கொடுக்கின்றான்.அதுவுஞ் சரிவராத நிலையில் உண்மையை விளக்கி மேலதிகாரிக்கு அறிக்கை அனுப்பியவர்.
- சரவணமுத்து அப்பீல் செய்ததன் காரணமாக மாகாண அதிகாரி தனது குமாஸ்தாவை அனுப்பி நேரில் பார்த்து நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளதை அறிந்த பின்னர் தன்மீது ஒழுக்காற்று நடவடிக்கைக்கான நோட்டீஸ் அனுப்பப்பட்டதால் வேதனையுற்றவர்.
- “கூட்டத்தில் ஒரு குழந்தை ஏதோ நோய்வாய்பட்டு ஒரு கிழிந்த துணியில் படுத்துக்கொண்டிருந்தது.இன்ஸ்பெக்டர் ஒரு தடவை வீட்டைநோட்டம் பார்த்தார். வார்த்தைகளால் தெரிவிக்க இயலாத தாழ்ந்த நிலையின் சாயலே எங்கும் தென்பட்டது.”
- தன்னுடைய பணியினை சிறப்பாக செய்வதோடு பணியாளர்களை நேரில் சென்று பார்வையிடும் இயல்பினை உடையவர். வேறு இடத்திற்கு செல்லும் போது தன் பணியாளரான சரவணமுத்துவினை பார்த்து செல்வதனை, சவுக்கை பயிர்ச் செய்கை தொடர்பாக விசாரிப்பதனை குறிப்பிடலாம்.“சும்மாதான் இந்த பக்கம் போனேன் இப்படியே பார்த்தவிட்டு போகலாம் என்று தோன்றிற்று”.
- அலுவலகத்தில் இதுவரை நேர்மையான உத்தியோகத்தர் எனப் பேரெடுத்தவர். இருந்தும் சரவணமுத்து வீடு சென்று அவருடன் உரையாடிய பின்னர், தான் கெட்ட பெயர் எடுத்தாலும் பரவாயில்லை, பங்களாக்காரர் செய்த பேருதவிக்குத் தனது சிறிய உதவியும் சேர்ந்து கொள்ளட்டும் என நினைத்து “பங்களாக்காரர் விளக்கேற்றி வைத்தார் என்று சொன்னீரல்லவா? நான் விளக்கிற்கு எண்ணெயாக இருந்துவிட்டுப் போகிறேன்”எனப் பெருமை மனிதாபிமானத்துடன் கூறிச் சென்றவர்.

www.lkedu.lk

www.lkedu.lk

- தன் மீது தவறு எனில் ஓய்வெடுக்கக் கட்டாயப்படுத்தப்படுவோம் எனத்தெரிந்தும் ஒப்புக்கொண்டவர். ஓய்வு வயது எல்லையும் நெருங்கிவிட்டது;எனவே ஒரு மனிதரின் துயர் தீர நாமும் துணையாவோம் எனக் கருதியவர்.

(இ)பங்காளக்காரர்

- பெரிய பங்களாவிற்கு சொந்தக்காரன்,சரவணமுத்து குடியிருக்கும் வீட்டிற்க்குப் பக்கத்தில் குடியிருப்பவர்.விவசாயக் கம்பனி ஒன்றில் வேலை பார்ப்பவர். ஆழகான காய்கறித் தோட்டத்துடன் மலர்த்தாவரங்கள்,செடி கொடி வகைகளையும் வைத்திருப்பவர்.
- பொழுது போக்குக்காக சரவணமுத்து அங்கு வருகையில் தோட்டத்திலிருந்து அவருடன் உரையாடுபவர்.
- நவீன தொழில் நுட்ப அறிவும் விஞ்ஞான ரீதியான அறிவினையுமுடையவர். விஞ்ஞான முறைப்படி மின்சார ஜலம் பாய்ச்சிப் பயிர் செய்பவர். ஒருவருசப் பயிரை ஒரு மாதப் பயிராக்கலாம் என நம்பியவர். சரவணமுத்துவுக்காக இரு மாதங்களில் பல மாதப்பயிர்போல் சவுக்கைப் பயிரிட்டு வளரச் செய்து பெருந்துணை புரிந்தவர். ''சவுக்கை ஸ்தலத்தில் பார்வையிட்டார் கட்டாந்தரையாக இருந்த இடத்தில் சவுக்கை, வளந்த்திருந்தது. திகைப்பு கரைபுரண்டது.''
- பிறரின் துன்பத்தினைக் கண்டு இரங்கும் இயல்பு கொண்டவர். அதாவது சரவணமுத்து சவுக்கைப் பயிரிடுவதற்காக அரசு வழங்கிய பணத்தினைச் செலவழித்து விட்டு என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாது பெரும் துன்பப்படும் போது இரக்கப்பட்டு தன்னுடைய அறிவினையும் பணத்தினையும் செலவழித்து உதவி புரிந்தான்.''கவலைப் படாதேயும் நான் செலவழித்துச் செய்து விடுகிறேன்''
- சரவணமுத்து வேலையில் இருந்து நீக்கப்பட்ட அன்று, வாடியிருப்பதன் காரணத்தை அறிந்து அவருக்கு உதவ முயன்றவனர். அவரை வற்புறுத்தித் தானே எழுதி அப்பீலை அனுப்பமாறு செய்தவர். ''கவலைப்படாதேயும், நான் செலவழித்துப் பயிர்செய்து விடுகிறேன்'' என்று ஆறுதலும் நம்பிக்கையும் அளித்தவர்.
- பழைய வாழ்வியல் நிலைகளிலிருந்து விடுபட்டு புதிய யுகத்திற்கு ஏற்றாப் போல் வாழும் தன்மையினையுடையவன்.
- ''நீர்இன்னும் பழைய யுகத்திலேயே இருந்து கொண்டிருக்கிறீர்.இந்தக் கத்தரிப் பாத்தியை வந்து பார்த்து விட்டுச் சொல்லையா!''நவீன யுகத்தினையும் பழைய யுகத்தினையும் ஒப்பிட்டு அறியவேண்டும் என்னும் தன்னம்பிக்கையுடையவர்.
- ''இது சாதாரண முறையில் பயிர் செய்யப்பட்ட கத்தரிப்பாத்தி இது மின்சார ஜலம் பாய்ச்சி விஞ்ஞான ரீதியில் பயிர் செய்தால் ஒரு மாதப் பயிர் ஒரு வருஷத்துப் பயிர் போல் தோற்றமளிக்கும் என்றா சொல்கிறீர்கள்?''

(ஈ)சென்னை மாகாண அதிகாரி

- சரவணமுத்துவின் அப்பீலைப் பார்த்துக் கோபடைந்தவர்.மொட்டை மனுவிற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதென குமாஸ்தாவை கடிந்தவர்.
- இன்ஸ்பெக்டரின் அறிக்கைக்கும், சரவணமுத்துவின் அப்பீலுக்கும் இடையிலான முரண்பாட்டின் உண்மையை அறிவதற்காகத் தனது அந்தரங்கக் குமாஸ்தாவை அனுப்பி ஸ்தலத்தைப் பார்த்து அறிக்கை அனுப்ப உத்தரவிட்டவர்.
- சவுக்கைப் பயிர் ஸ்தரலத்தில் இருப்பதாக வந்த அறிக்கையின் பிரகாரம் இன்ஸ்பெக்டர் மீது அவநம்பிக்கை கொண்டவர். இருந்தும் அலுவலகக் கோவைகளின் படி நேர்மையான உத்தியோகத்தராக இன்ஸ்பெக்டர் விளங்கியமையால் ஆத்திரமடங்கி அப்பீலைப் பைசல் செய்ய முயன்றவன்.
- இன்ஸ்பெக்டர் பொய்யறிக்கை அனுப்பியதாகவும், அதன்படி 'உம்மீது ஏன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கக் கூடா'தென்றும் கேட்டு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டவர்.
- இன்ஸ்பெக்டரின் அந்தரங்கக் குறிப்புக்களைப் புரட்டிப்பார்த்த பின் சமாதானம் கொண்டவர்.

சரவணமுத்து கதாபாத்தரத்தின் குடும்ப ஏழ்மை நிலையின் சித்திரிப்பு

- அதிகமான குழந்தைகள் (படி முதல் வீசம் வரை-பெரிது தொடக்கம் சிறிது வரை)
- தேய்ந்து துருப்பிடித்தவை போல் காணப்பட்ட குழந்தைகள்: பிள்ளைகள் உருக்குலைந்து வளர்ச்சியற்றுக் காணப்படுவது. ஒரு வருஷமாக ஒருவர் மாறி ஒருவர் சீக்கில் கிடத்தல்.
- குழந்தைகளின் உடையும், உடையின்மையும் பெற்றோரின் பொருளாதார நிலையைப் புலப்படத்துவன.
- கிழிந்த துணியில் படுத்துக்கிடக்கும் நோய்வாய்ப்பட்ட குழந்தை.

www.lkedu.lk

www.lkedu.lk

- வீட்டிற்கு வரும் இன்ஸ்பெக்டர் முன்னே சரவணமுத்து அலங்கோலமாக ஒடிவருவது.
- பிள்ளைகள் முரணான பதிலைக் கூறும் நிலை:சின்னப் பெண் 'இல்லையே' என,கொஞ்சம் வயது வந்த பையன் 'அதுதான் உள்ளே இருக்கிறாரே'என்பது.
- இன்ஸ்பெக்டர் இருப்பதற்காகக் கிழிந்த பாயினை எடுத்துப்போடல்.
- இன்ஸ்பெக்டர் வீட்டை நோட்டமிடும் போது வார்த்தைகளால் கூறவியலாத தாழ்ந்த நிலையின் சாயல் தென்படுவதாக குறிப்பிடல்.
- அரசாங்கம் பயிரிடக் கொடுத்த பணத்தை தவறு என்று தெரிந்தும் வறுமையால் வீட்டுச் செலவுக்குப் பயன்படுத்தி அதனை மீளப் பெற முடியாமல் அவதியுறல்.
- ''நீங்கள் காப்பாற்றினால்தான் உண்டு இல்லாவிட்டால் பிழைப்பே இதோடு முடிந்து விடும்.நீங்கள் கடவுள்மாதிரி பெரியமனது செய்தாலொளிய நான் கெட்டு விடுவேன்''என இரக்கத்துடன் கூறுவது.
- வறுமையின் தரித்திரத்தில் உழலும் மனமுடைய சரவணமுத்து பங்களாக்காரின் பசுமையான காய்கறிகள் நிறைந்த தோட்டத்திற்கு மன அமைதி வேண்டிப் போதல்.
- பூச்சி பிடித்த பீர்கன் இலைமாதிரி அவரின் முகம் தெளிவற்றிருத்தல்:கவலை வெளிப்படல்.
- ஒருநாள் கஸ்டமென்றால் சொல்லிக் கொள்ளலாம் ஓயாத கஸ்டத்தை பிறரிடம் சொல்லி என்ன செய்வதென பங்களாக் காரரிடம் சொல்வது.
- பங்களாக்காரர் கூறியபடி மேன்முறையீடு செய்யத்தயங்கினாலும் வறுமைகாரணமாக அதற்கு உடன் படுதல்.
- பொய் சொல்ல விரும்பாதவர்:

தோல்வியினைக் கண்டு துவளக்கூடாது மீண்டும் உயிர்த்தெழ வேண்டும் என்பதற்கு ஆசிரியர் கூறும் விடயங்கள்

''கிளையிலிருந்து தேன்சிட்டுக் கூடு ஒன்று லோலக்கைப்போல தொங்கிக் கொண்டிருந்தது. சரவணமுத்துவை அறியாமலேயே கூட்டின் கட்டிடத் திறமை அவர் மனதை வசப்படுத்தி விட்டது சிறிது நேரத்திற்கெல்லாம் மற்றொரு குருவி வந்து அதே காரியத்தைத் திருப்பவும் செய்து விட்டுப் பறந்து சென்றது. இதே மாதிரி மாறிமாறிப் பல தடவை நடந்தது. குருவிகளாய் இருந்தால் கவலை இல்லாமல் இருக்குமே''''உலகத்தில் பிழைக்க முயலும் போது சீந்தில் கொடியைப் போல் தரித்திரமும் கூட வந்து கழுத்தை நெரிக்காமல் இருக்காது''

கதாசிரியரியரின் மொழி நடைத் தன்மை

- சிறிய சிறிய சொற்களைக் கொண்ட வசனங்களைப் பயன்படுத்திய எளிமையதயிருத்தல்.
- சிறிய வாக்கிய அமைப்புடைய பாங்கு:
- ஆங்காங்கே ஆங்கிலச் சொற்களும் கணிசமான வடசொற்களைப் பயன்படுத்தியிருத்தல்: பழக்கப்பட்டுப்போன சில ஆங்கிலச் சொற்களையும் கதையில் இடம்பெறச் செய்தல்:இன்ஸ்பெக்டர், கம்பனி, அப்பீல், நோட்டீஸ் முதலானவை
- அதீத உணர்ச்சிக்கு ஆட்படாது, யதார்த்த பூர்வமான பாத்திரச் சித்திரிப்பு:
- பொருத்தமான வர்ணனைகள் மூலம் கதாப்பாத்திர உணர்வுகளை முன்னிறுத்தல்: நாரத்தை மரக் கிளையிலிருந்து தொங்கும் சிட்டுக் குருவிக் கூடும், குஞ்சுக்கு உணவூட்டுதலும்.பயிர்செய்யப்பட்ட கொடியைச் சுற்றிக் கிடக்கும் சீந்தில் கொடி.
- கதைசொல்லியாகச் சிறுகதையாசிரியரே விளங்குவதால், உரையாடல்களில் பேச்சுவழக்கும், விசாரணைகளில் எழுத்து வழக்கும் அதிகம் பயன்பட்டிருத்தல்:எதிர்த்தாற்போல,வாசலண்டை,லோலாக்கு
- இடைக்கிடை பொருத்தமான உவமைகளையும் கதையோட்டத்தில் பயன்படுத்தியிருத்தல்:''தேன் சிட்டுக் கூடு ஒன்று லோலாக்கைப் போல் தொங்கிக் கொண்டு இருந்தது.'' ''மலைப்பாம்பு சுற்றிக் கொள்வது போல் சீந்தில் கொடியொன்றும் சுற்றிக் கொண்டு இருந்தது.'' ''உலகத்தில் பிழைக்க முயலும் போது சீந்தில் கொடியைப் போல் தரித்திரமும் கூட வந்து கழுத்தை நெறிக்காமல் இருக்காது போல் இருக்கிறது.'' ''பூச்சி பிடித்த பீர்க்கன் இலைமாதிரி இருக்கிறது'' ''ஆற்றிலே மிதக்கும் சுள்ளியைப் போன்றது தான் அவர் மனப்பான்மை''
- கொழுகொம்பு, செப்பிடுவித்தை முதலான மரபுத் தொடர்களையும் சிறுகதையில் பயன்படுத்தியிருத்தல்.
- உணர்ச்சிச் செறிவான சிந்தனையின் பிரயோகம்:ஒரு நாள் கஷ்டமானால் சொல்லிக் கொள்ளலாம்,ஓயாத கஷ்டத்தைப் பற்றி பிறரிடம் சொல்லி என்ன செய்வது?''''தரித்திரத்தில் உழலும் மனத்துக்குத் தோட்டத்துப் பச்சையும், சிவப்பும், காய்கறிகளும், புஸ்பங்களின் மணமும் விபரிக்க முடியாத ஆறுதலைக் கொடுக்கும்''

www.lkedu.lk

www.lkedu.lk

- நகைச்சுவையாக கருத்தை வெளிக் கொணரல்:கண்ணை மூடிக்கொண்டு காலை நீட்ட வேண்டியதுதான்.
- சிக்கனமான விபரணப்பாங்கு:

கதையினூடாக வெளிப்படும் படிப்பினைகள்

- மனிதனானவன், தன்னால் முடிந்தவரை மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவவேண்டும்.
- நெருக்கடிக்கு உள்ளாகிய ஒருவரை அதிலிருந்து அவரை வெளிக்கொண்டு வருவதற்காக அனுதாபத்துடன் செயற்பட வேண்டும்.
- நேர்மைத்துவத்துடன் நடந்து கொள்ளும் ஒருவர் மனிதாபிமானத்தின் அடிப்படையில் தவறு செய்தாலும் அது தவறாகாது. சொந்த நலனிலும் மனிதாபிமானமே மனிதருக்கு மேலானது.
- விஞ்ஞான அறிவினால் ஒரு மாதப் பயிரைக் கூட ஒரு வருசப் பயிராக வளரச் செய்து குறுகிய காலத்தில் நிறைவான பயனை அடைய முடியும்.
- பொழுதுபோக்கு மற்றும் பயன்பாடு என்பவற்றுக்காக பூந்தோட்டம்,பயிர்வளர்ப்பு,இயற்கையை ரசித்தல் செயற்பாடுகள் ஊடாக மனநெருக்கடியான நிலைகளிலிருந்து விடுபடலாம்.
- அரச பணத்தை வீண்விரயமோ மோசடியோ செய்யலாகாது.
- குடும்ப அங்கத்தவர்களில் பிள்ளைகள் அதிகளவில் இருந்தால் வறுமையை கட்டுப்படுத்த முடியாது.சுகமான வாழ்வுக்கு அளவான குடும்பம் அவசியம்.
- விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் நெருக்கடியான நிலையிலிருந்து விடுபடலாம்.
- நெருக்கடியான நிலையிலிருந்து விடுபட விஞ்ஞான அறிவியல் துறைசார்ந்த மாற்று வழிகளையும் பயன்படுத்தலாம்.
- எவ்வளவுதான் நேர்மையுள்ளவராக இருந்தாலும் சந்தர்ப சூழ்நிலைகள் சார்ந்த நெருக்கடிகள் அவரை நேர்மையீனராக மாற்றிவிடும்.
- நமக்கு எவ்வளவுதான் நன்மையான விடயங்கள் நடந்தேறினாலும் அவற்றை நலிவுறுத்தும்,இழிவுபடுத்தும் செயற்பாடுகளும் நடந்தேறும்.
- அயலவரோடு எப்போதும் சுமூகமான உறவைப் பேணவேண்டும்.அப்போதுதான் எந்தவொரு கஷ்டத்திற்கும் அவர்கள் உதவுபவர்களாக இருப்பர்.
- நாம் எந்தத் தொழில் செய்தாலும்அதில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருத்தல் வேண்டும்.
- நாம் எந்தத் தொழில்த்துறை சார்ந்தவரானாலும் சுயதொழில் முயற்சிகளையும் தேர்ந்து கற்று பயன் பெற வேண்டும்.
- எவ்விடயத்தையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்:மாகாண அதிகாரி இன்ஸ்பெக்டர் பற்றிய குறிப்பக்களை ஆராய்தல்.

'நெருக்கடி' கதைத்தலைப்பின் பொருத்தப்பாடு

- கதை ஆரம்பம் முதல் இறுதிவரை பலகதாபாத்திரங்களின் நெருக்கடி நிலையை பிரதிபலித்தல்.
- **சரவணமுத்துவின் பல்வேறு நெருக்கடி நிலைகள்**: பொருளாதாரம்,வறுமை, மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்தமை,பங்களாக்காரர் உதவ முன்வந்த போதும் சரவணமுத்துவின் மனம் அதை ஏற்க மறுக்கும் நிலை.
- **இன்ஸ்பெக்கடருக்கு ஏற்பட்ட நெருக்கடி**:சரவணமுத்துவை காப்பாற்றும் சங்கட நிலை,குடும்பக் கஸ்டத்தை நேரில் அறிந்த நிலையில் சர்க்காருக்கு அதை அறிவிக்கவேண்டிய நிலைமை.அவருக்கு உத்தியோகம் பறிபோகும் நிலை.எல்லாவற்றையும் தாண்டி அவரின் உதவும் மனநிலை.
- **பங்களாக்காரரின் நெருக்கடி நிலை**:சரவணமுத்துவுக்கு உதவ முன்வரல்,கடிதம் எழுதும் விதம் பற்றிக் கூறல்.
- பாத்திரங்களின் நெருக்கடி நிலை ஊடாக வாசகரை நெருக்கடிக்குள்ளாக்கும் பிச்சமூர்த்தியின் உத்தி வெற்றி பெறுவது.
- **மாகாண அதிகாரிக்கு ஏற்பட்ட நெருக்கடி**:உண்மையான கருத்தைக் கூறியவர் இன்ஸ்பெக்டரா சரவணமுத்துவா என நினைத்தல்.

www.lkedu.lk

www.lkedu.lk

நெருக்கடி சிறுகதைப் பயிற்சிப்பரீட்சை மாதிரி விளா விடை 2020:

01.(அ) ந.பிச்சமூர்த்தியின் 'நெருக்கடி' சிறுகதையில் ஆசிரியர் கூற வந்த விடயத்தை குறிப்பிடுக.

- **கூறும் விடயம்:** நெருக்கடிக்கு உள்ளாகிய ஒருவரது நிலையும் அதிலிருந்து அவரை வெளிக்கொண்டு வருவதற்காக அனுதாபத்துடன் செயற்படும் பாத்திரங்களின் துலங்கலும்.
- **அல்லது** விஞ்ஞான அறிவினால் ஒரு மாதப் பயிரைக் கூட ஒரு வருசப் பயிராக வளரச் செய்யலாம் என்றும் விஞ்ஞான அறிவினால் குறுகிய காலத்தில் நிறைவான பயனை அடைய முடியும் எனும் விடயத்தினைக் கூறுவதாக அமைகின்றது.

(03 புள்ளிகள்)

(ஆ)சரவணமுத்து கதாபாத்தரத்தின் குடும்ப ஏழ்மை நிலை சித்திரிக்கப் பட்டவாற்றை எடுத்துக்காட்டுக.

- அதிகமான குழந்தைகள் (படி முதல் வீசம் வரை-பெரிது தொடக்கம் சிறிது வரை)
- தேய்ந்து துருப்பிடித்தவை போல் காணப்பட்ட குழந்தைகள்:பிள்ளைகள் உருக்குலைந்து வளர்ச்சியற்றுக்காணப்படுவது.
- குழந்தைகளின் உடையும், உடையின்மையும் பெற்றோரின் பொருளாதார நிலையைப் பலப்படத்துவன.
- கிழிந்த துணியில் படுத்துக்கிடக்கும் நோய்வாய்ப்பட்ட குழந்தை.
- வீட்டிற்கு வரும் இன்ஸ் பெக்டர் முன்னே சரவணமுத்து அலங்கோலமாக ஓடிவருவது.
- பிள்ளைகள் முரணான பதிலைக் கூறும் நிலை:சின்னப் பெண் 'இல்லையே' என,கொஞ்சம் வயது வந்த பையன் 'அதுதான் உள்ளே இருக்கிறாரே'என்பது.
- இன்ஸ்பெக்டர் இருப்பதற்காகக் கிழிந்த பாயினை எடுத்துப்பேடல்.
- இன்ஸ்பெக்டர் வீட்டை நோட்டமிடும் போது வார்த்தைகளால் கூறவியலாத தாழ்ந்த நிலையின் சாயல் தென்படுவதாக குறிப்பிடல்.
- ஒரு வருஷமாக ஒருவர் மாறி ஒருவர் சீக்கில் கிடத்தல்.
- அரசாங்கம் பயிரிடக் கொடுத்த பணத்தை தவறு என்று தெரிந்தும் வறுமையால் வீட்டுச் செலவுக்குப் பயன்படுத்தி அதனை மீழப் பெற முடியாமல் அவதியுறல்.
- ''நீங்கள் காப்பாற்றினால்தான் உண்டுஇல்லாவிட்டால் பிழைப்பே இதோடு முடிந்த விடும்.நீங்கள் கடவுள்மாதிரி பெரியமனது செய்தாலொளிய நான் கெட்டு விடுவேன்''என இரக்கத்துடன் கூறுவது.
- வறுமையின் தரித்திரத்தல் உழலும்மனமுடைய சரவணமுத்து பங்களாக்காரின் பசுமையான காய்கறிகள் நிறைந்த தோட்டத்திற்கு மன அமைதி வேண்டிப் போதல்.
- பூச்சி பிடித்த பீர்கன் இலைமாதிரி அவரின் முகம் தெளிவற்றிருத்தல்.
- ஒருநாள் கஸ்டமென்றால் சொல்லிக் கொள்ளலாம் ஓயாத கஸ்டத்தை பிறரிடம் சொல்லி என்ன செய்வதென பங்களாக் காரரிடம் சொல்வது.
- பங்களாக்காரர் கூறியபடி மேன்முறையீடு செய்யத்தயங்கினாலும் வறுமைகாரணமாக அதற்கு உடன் படுதல்.

(06 புள்ளிகள்)

(இ) இன்ஸ்பெக்டர் அல்லது பங்காளக்காரர் பற்றி உமது மனப்பதிவினை வெளிப்படுத்திக்காட்டுக.

இன்ஸ்பெக்டர்

- விசாய இலாகா இன்ஸ்பெக்டர் பணியில்,சரவணமுத்துவின் தோட்டத்தில் சவுக்கைப் பயிரிடாமையை நேரில் பார்த்தவின், அவரது வீடு சென்று காரணங் கேட்டவர்.
- நேர்மையானவர் அதாவது சரவணமுத்து பயிரிடவில்லை என்பதனை ஓரிரு வாரம் கழித்து அரசிற்கு அறிக்கை எழுதி அனுப்புகின்றார்.''ஒரு வாரம் இல்லை இரண்டு வாரம் பார்க்கிறேன்.அதற்குள் ஏதாவது செய்திருந்தால் என்னிடம் வந்து சொல்லுங்கள். நீர் வராவிட்டால் பதினாறாவது நாள் என் அறிக்கையை அனுப்பி விடுகிறேன்''
- இரக்க சுபாவம் உடையவன், சரவணமுத்துவின் வீட்டிற்குச் சென்று அவரின் ஏழ்மை நிலையைக் கண்ணாரக் கண்ட நிலையில பிள்ளையின் உடைகளைப் பார்த்தும், நோய்வாய்ப்பட்ட அவரின் பிள்ளைகளைக் கண்டும், குடும்பத்தின் வறுமைக்காக அரச பணத்தினை செலவு செய்தமையினைப் பொறுத்து இரண்டு வாரம் அவகாசம் கொடுக்கின்றான்.அதுவுஞ் சரிவராத நிலையில் உண்மையை விளக்கி மேலதிகாரிக்கு அறிக்கை அனுப்பியவர்.

www.lkedu.lk

www.lkedu.lk

- சரவணமுத்து அப்பீல் செய்ததன் காரணமாக மாகாண அதிகாரி தனது குமாஸ்தாவை அனுப்பி நேரில் பார்த்து நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளதை அறிந்த பின்னர் தன்மீது ஒழுக்காற்று நடவடிக்கைக்கான நோட்டீஸ் அனுப்பப்பட்டதால் வேதனையுற்றவர்.
- ''கூட்டத்தில் ஒரு குழந்தை ஏதோ நோய்வாய்பட்டு ஒரு கிழிந்த துணியில் படுத்துக்கொண்டிருந்தது.இன்ஸ்பெக்டர் ஒரு தடவை வீட்டைநோட்டம் பார்த்தார். வார்த்தைகளால் தெரிவிக்க இயலாத தாழ்ந்த நிலையின் சாயலே எங்கும் தென்பட்டது.''
- தன்னுடைய பணியினை சிறப்பாக செய்வதோடு பணியாளர்களை நேரில் சென்று பார்வையிடும் இயல்பினை உடையவர். வேறு இடத்திற்கு செல்லும் போது தன் பணியாளரான சரவணமுத்துவினை பார்த்து செல்வதனை சவுக்கை பயிர்ச் செய்கை தொடர்பாக விசாரிப்பதனை குறிப்பிடலாம்.''சும்மாதான் இந்த பக்கம் போனேன் இப்படியே பார்த்தவிட்டு போகலாம் என்று தோன்றிற்று''.
- அலுவலகத்தில் இதுவரை நேர்மையான உத்தியோகத்தர் எனப் பேரெடுத்தவர். இருந்தும் சரவணமுத்து வீடு சென்று அவருடன் உரையாடிய பின்னர், தான் கெட்ட பெயர் எடுத்தாலும் பரவாயில்லை, பங்களாக்காரர் செய்த பேருதவிக்குத் தனது சிறிய உதவியும் சேர்ந்த கொள்ளட்டும் என நினைத்து ''பங்களாக்காரர் விளக்கேற்றி வைத்தார் என்று சொன்னீரல்லவா? நான் விளக்கிற்க எண்ணெயாக இருந்துவிட்டுப் போகிறேன்''எனப் பெருமை மனிதாபிமானத்துன் கூறிச் சென்றவர்.
- தன் மீது தவறு எனில் ஓய்வெடுக்கக் கட்டாயப்படுத்தப்படும்; ஓய்வு வயது எல்லையும் நெருங்கிவட்டது;எனவே ஒரு மனிதரின் துயர் தீர நாமும் துணையாவோம் எனக் கருதியவர்.

<u>பங்காளக்காரர்</u>

- பெரிய பங்காளவிற்கு சொந்தக்காரன்''சரவணமுத்து குடியிருக்கும் வீற்டிக்குப் பக்கத்தில் குடியிருப்பவர்''விவசாயக் கம்பனி ஒன்றில் வேலை பார்ப்பவர். ஆழகான காய்கறித் தோட்டத்துடன் மலர்த்தாவரங்கள்,செடி கொடி வகைகளையும் வைத்திருப்பவர்.
- பொழுது போக்குக்காக அங்கு சரவணமுத்து அங்கு வருகையில் தோட்டத்திலிருந்து அவருடன் உரையாடுபவர்.
- நவீன தொழில் நுட்ப அறிவும் விஞ்ஞான ரீதியான அறிவிணையுடையவர். விஞ்ஞான முறைப்படி மின்சார ஜலம் பாய்ச்சிப் பயிர் செய்பவர். ஒருவருசப் பயிரை ஒரு மாதப் பயிராக்கலாம் என நம்பியவர். சரவணமுத்துவுக்காக இரு மாதங்களில் பல மாதப்பயிர்போல் சவுக்கைப் பயிரிட்டு வளரச் செய்து பெருந்துணை புரிந்வர். ''சவுக்கை ஸ்தலத்தில் பார்வையிட்டார் கட்டாந்தரையாக இருந்த இடத்தில் சவுக்கை, வளந்த்திருந்தது. திகைப்பு கரைபுரண்டது.''
- பிறரின் துன்பத்தினைக் கண்டு இரங்கும் இயல்பு கொண்டவர். அதாவது சரவணமுத்து சவுக்கைப் பயிரிடுவதற்காக அரசு வழங்கிய பணத்தினைச் செலவழித்து விட்டு என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாது பெரும் துன்பப்படும் போது இரக்கப்பட்டு தன்னுடைய அறிவினையும் பணத்தினையும் செலவழித்து உதவி புரிந்தான்.''கவலைப் படாதேயும் நான் செலவழித்துச் செய்து விடுகிறேன்''
- சரவணமுத்து வேலையில் இருந்து நீக்கப்பட்ட அன்று, வாடியிருப்பதன் காரணத்தை அறிந்து அவருக்கு உதவ முயன்றவனர். அவரை வற்புறுத்தித் தானே எழுதி அப்பீலை அனுப்பமாறு செய்தவர். ''கவலைப்படாதேயும், நான் செலவழித்துப் பயிர்செய்து விடுகிறேன்'' என்று ஆறுதலும் நம்பிக்கையும் அளித்தவர்.
- பழைய வாழ்வியல் நிலைகளிலிருந்து விடுபட்டு புதிய யுகத்திற்கு ஏற்றாப் போல் வாழும் தன்மையினையுடையவன்.
- ''நீர்இன்னும் பழைய யுகத்திலேயே இருந்து கொண்டிருக்கிறீர்.இந்தக் கத்தரிப் பாத்தியை வந்து பார்த்து விட்டுச் சொல்லையா!''நவீன யுகத்தினையும் புதிய யுகத்தினையும் ஒப்பிட்டு அறியவேண்டும்.என்னும் தன்னம்பிக்கையுடன்.
- ''இது சாதாரண முறையில் பயிர் செய்யப்பட்ட கத்தரிப்பாத்தி இது மின்சார ஜலம் பாய்ச்சி விஞ்ஞான ரீதியில் பயிர் செய்தால் ஒரு மாதப் பயிர் ஒரு வருஷத்துப் பயிர் போல் தோற்றமளிக்கும் என்றா சொல்கிறீர்கள்?''

(05 புள்ளிகள்)

<u>(ஈ) 'நெருக்கடி' சிறுகதையினூடாக வெளிப்படும் யாதாயினும் படிப்பினைகள் ஆறினை எடுத்துக்காட்டுக.</u>

- மனிதனானவன், தன்னால் முடிந்தவரை மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவவேண்டும்.
- நெருக்கடிக்கு உள்ளாகிய ஒருவரை அதிலிருந்து அவரை வெளிக்கொண்டு வருவதற்காக அனுதாபத்துடன் செயற்பட வேண்டும்.

www.lkedu.lk

www.lkedu.lk

- நேர்மைத்துவத்துடன் நடந்து கொள்ளும் ஒருவர் மனிதாபிமானத்தின் அடிப்படையில் தவறு செய்தாலும் அது தவறாகாகது. சொந்த நலனிலும் மனிதாபிமானமே மனிதருக்கு மேலானது.
- விஞ்ஞான அறிவினால் ஒரு மாதப் பயிரைக் கூட ஒரு வருசப் பயிராக வளரச் செய்து குறுகிய காலத்தில் நிறைவான பயனை அடைய முடியும்.
- பொழுதுபோக்கு மற்றும் பயன்பாடு என்பவற்றுக்காக பூந்தோட்டம்,பயிர்வளர்ப்பு,இயற்கையை ரசித்தல்ச் செயற்பாடுகள் ஊடாக மனநெருக்கடியான நிலைகளிலிருந்து விடுபடலாம்.
- அரச பணத்தை வீண்விரயமோ மோசடியோ செய்யலாகாது.
- குடும்ப அங்கத்தவர்களில் பிள்ளைகள் அதிகளவில் இருந்தால் வறுமையை கட்டுப்படுத்த முடியாது.சுகமான வாழ்வுக்கு அளவான குடும்பம் அவசியம்.
- விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் இருந்தால் நெருக்கடியான நிலையிலிருந்து விடுபடலாம்.
- நெருக்கடியான நிலையிலிருந்து விடுபட விஞ்ஞான அறிவியல் துறைசார்ந்த மாற்று வழிகளையும் பயன்படுத்தலாம்.
- எவ்வளவுதான் நேர்மையுள்ளவராக இருந்தாலும் சந்தர்ப சூழ்நிலைகள் சார்ந்த நெருக்கடிகள் அவரை நேர்மையீனராக மாற்றிவிடும்.
- நமக்கு எவ்வளவுதான் நன்மையான விடயங்கள் நடந்தேறினாலும் அவற்றை நலிவுறுத்தும்,இழிவுபடுத்தும் செயற்பாடுகளும் நடந்தேறும்.
- அயலவரோடு எப்போதும் சுமூகமான உறவைப் பேணவேண்டும்.அப்போதுதான் எந்தவொரு கஷ்டத்திற்கும் அவர்கள் உதவுபவர்களாக இருப்பர்.
- நாம் எந்தத் தொழில் செய்தாலும்அதில் நேர்மையாகவும் உண்மையாகவும் இருத்தல் வேண்டும்.
- நாம் எந்தத் தொழில்த்துறை சார்ந்தவரானாலும் சுயதொழில் முயற்சிகளையும் தேர்ந்து கற்று பயன் பெற வேண்டும்.

(03 புள்ளிகள்)

(உ)'நெருக்கடி' எனும் சிறுகதையின் கதைத்தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி கருத்துரைக்குக.

- கதை ஆரம்பம் முதல் இறுதிவரை பலகதாபாத்திரங்களின் நெருக்கடி நிலையை பிரதிபலித்தல்.
- **சரவணமுத்துவின் பல்வேறு நெருக்கடி நிலைகள்**: பொருளாதாரம்,வறுமை, மனச்சாடசிக்கு விரோதமாக நடந்தமை,பங்களாக்காரர் உதவ முன்வந்த போதும் சரவணமுத்தவின்மனம் அதை ஏற்க மறுக்கும் நிலை.
- **இன்ஸ்பெக்கடருக்கு ஏற்பட்ட நெருக்கடி**:சரவணமுத்துவை காப்பாற்றும் சங்கட நிலை,குடும்பக் கஸ்டத்தை நேரில் அறிந்த நிலையில் சர்க்காருக்கு அதை அறிவிக்கவேண்டிய நிலைமை.அவருக்கு உத்தியோகம் பறிபோகும் நிலை.எல்லாவற்றையும் தாண்டி அவரின் உதவும் மனநிலை.
- **பங்களாக்காரரின்நெருக்கடி நிலை**:சரவணமத்தவுக்கு உதவ முன்வரல்,கடிதம் எழுதும் விதம் பற்றிக் கூறல்.
- பாத்திரங்களின் நெருக்கடி நிலை ஊடாக வாசகரை நெருக்கடிக்குள்ளாக்கும் பிச்சமூர்த்தியின் உத்தி வெற்றி பெறுவது.

(03 புள்ளிகள்)

02.ந.பிச்ச மூர்த்தியின் நெருக்கடி சிறுகதையில்,

(அ) ஆசிரியர் வலியுறுத்த முற்படும் விடயம் யாது?

= மனிதன் மனிதாபிமானத்தைப் பேணவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். அதனை வலியுறுத்த நெருக் கடிக்குள்ளான சரவணமுத்துவின் நிலையும் அதிலிருந்து அவரைவெளிக்கொணர்வதற்காக, அனுதாபத்துடன் செயலாற்றும் பாத்திரங்களையும் படைத்துள்ளார்.

= நெருக்கடிக்குள்ளான சரவணமுத்து வறுமை காரணமாகக் குற்றம் இழைத்திருந்தாலும் அவரை நெருகக் டியிலிருந்து மீட்கப் பாடுபட்ட இன்ஸ் பெக்டர் நெருக்கடியைச் சந்திக்கின்றார். எனினும், சரவணமுத்துவின் வறுமைநிலை, அவரின் குழந்தைகள் என்பவற்றையும் தன் ஓய்வுகாலம், பிள்ளைகள் இல்லாத நிலை என்பவற்றையும் எண்ணிச் சரவணமுத்துவிற்காக நேர் மனப்பாங்குடன் முடிவெடுப்பதனூடாக மனிதாபிமானத்தின் உச்சம் வலியுறுத்தப்படுகின்றது.

(05 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk

(ஆ)மனிதனின் எண்ணங்களையும் நடத்தைகளையும் விவரிப்பதற்கு விலங்குகளும் தாவரங்களும் கையாளப்பட்டிருக்கும் திறத்தை விளக்குக.

= நாரத்தை மரத்தின் கிளையிலிருந்த 'தேன் சிட்டுக்கூடு' சரவணமுத்துவின் சிந்தனையைத் தூண்டுவதாக காட்டப்பட்டுள்ளது.

= சிட்டுக்குருவிகள் தமது குஞ்சுகளுக்காக உணவு தேடுவதும் ஊட்டுவதும் மாறிமாறிப்பல தடவைகள் நடந்தமையைப் பார்த்த சரவணமுத்து ''குருவிகளாய் இருந்தால் கவலைகள் இல்லாமல் இருக்குமே" என எண்ணுவது.

= பயிர் செய்யப்பட்ட கொடி ஒன்று மரம் ஒன்றைச் சுற்றிப் படர்ந்திருந்தது. ஆனால், மலைப்பாம்பு சுற்றிக் கொள்வதைப் போன்று சீந்தில் கொடி ஒன்றும் அதைச்சுற்றிக் கொண்டிருந்தது. முனக்குழப்பத்தில் இருந்த சரவணமுத்து விற்கு ''உலகத்தில் பிழைக்க முயலும் போது சீந்தில் கொடியைப் போல் தரித்திரமும் கூட வந்து கழுத்தை நெரிக்காமல் இருக்காதுபோல் இருக்கிறது என்ற எண்ணம் மிதந்தெழுந்தது"

= அவநம்பிக்கையுடன் இருந்த சரவணமுத்துவின் எதிரே கொழுகொம்பின் தயவுடன் படர்ந்து கொண்டிருந்த அவரைக்கொடி தென்பட்டதும், அது செயற்கையின் உதவியைக் கொண்டுதான் இயற்கை கூட ஊன்றிக்கொள்ள முடியும் என்ற அலைகளைத் தோற்றுவிக்க ''அப்பீலை நாளைக்கே கொடுப்பதற்கு தயாராகும் நிலைமை.

(10 புள்ளிகள்)

(இ)**சரவணமுத்து: அல்லது** பங்களாக்காரர் **அல்லது** இன்ஸ்பெக்டர் பாத்திரம் குறித்துக் கருத்துரைக்குக.

பங்களாக்காரர்

= மிகுந்த முயற்சியுடைவர்: ''பங்களாச் சொந்தக்காரரின் பங்களாவை விட தோட்டம் அழகாக இருக்கும்..." வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் ஏதாவது காய்கறி கிடைக்காமல் போகாது. நாள் தவறினாலும் தோட்டத்தில் புஷ் தவறாது.

= முகக் குறிப்பினால் ஒருவரை எடைபோடும் ஆற்றலுடையவர்: சரவணமுத்து மனக்குழப்பத்துடன் இருந்த வேளை ''எப்பொழுதும்போல் இல்லையே என்ன விசேஷம்?" எனக் கேட்டமை.

= உதவி செய்யும் மனப்பாங்குடையவர்: சரவணமுத்துவை நெருக்கடியில் இருந்து மீட்க முனைந்தமை,பயிர்செய்ய பணம் சரவணமுத்துவிடம் இல்லாத போது,''கவலைப்படாதேயும், நான் செலவழித்துச் செய்து விடுகிறேன் எனக்கூறியமை.

= புத்திசாதுரியம் மிக்கவர்: சரவணமுத்துவை நெருக்கடியிலிருந்து காப்பாற்றுவதற்காக, விஞ்ஞான ரீதியில் பயிர் செய்தமை.

= துணிச்சல் மிக்கவர்: இன்ஸ்பெக்டர் மனுக்கொடுத்த பின்னர் அப்பீலைத் துணிச் சலுடன் அனுப்பியது மட்டுமன்றி நிரூபித்தும் காட்டியவர்.

இன்ஸ்பெக்டர்:

= நேர்மையானவர்: சரவணமுத்து பயிர்செய்யாத போதும் கால அவகாசம் வழங்கி பின்னர் மனுத்தாக்கல் செய்தமை.

= அனுதாபம் கொண்டவர்: சவுக்குப் பயிரிடப்படவில்லை என அறிக்கை சமர்ப்பித்து உண்மையே என்பதை நிரூபித்தால் வறுமையில் திண்டாடும் சரவணமுத்து வின் குழந்தைகளும் பாதிக்கப்படுவார்கள். தான் ஓய்வு பெறும் கால எல்லை, தனக்குக் குழந்தைகள் இல்லாமை என்பவற்றைக் கருத்திற் கொண்டு உண்மையை நிரூபிக்காது விட்டமை.

சரவணமுத்து:

= வறுமையான குடும்பச் சூழல்: பிள்ளைகளின் உடைகளும் உடையின்மையும்,இன்ஸ்பெக்டர் அமர்வதற்கு கிழிந்த பாயைக் கொடுப்பது,சவுக்குப் பயிரிடுவதற்காக வழங்கிய பணத்தைக் குடும்பச் செலவிற்காகப் பயன்படுத்துவது.

= வாழ்க்கையில் சமாளிக்க முடியாத நெருக்கடிகளுக்குள்ளாதல்: சவுக்குப் பயிரிடப்படாமையால் ஏற் பட்ட நெருக்கடி,நெருக்கடியிலிருந்து மீள முடியாது திணறுதல்,இன்ஸ்பெக்டர் உண்மையை நிரூபிக்காதுவிட்டபோது நெருக்கடிகளுள்ளாதல்.

(05 புள்ளிகள்)

www.lkedu.lk